Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 199/2018**

வழக்கு சாட்சி எண். **PW4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்முருகன் | கிராமம் | : | கோட்டப்பட்டி |
| தந்தை பெயர் | : | ஜெயராஜ் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 39 | மாவட்டம் | : | தருமபுரி |

(1, 2 எதிரிகள் ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4**th** Day of **June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சுசில் என்பவர் பணி மாறுதலில் சென்றுவிட்ட காரணத்தினாலும், இவ்வழக்கின் முக்கிய சாட்சிகள் பிறழ்சாட்சியான காரணத்தினாலும் இன்று நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கின்றேன்.

கடந்த 31.07.2018ம் தேதி மாலை 3 மணியளவில் கோட்டப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சுசில் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது அரூர் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலின் பேரில் அங்கு சிகிச்சையில் இருந்த

கோவிந்தன் என்பவரிடம் இருந்து காவலர் சென்னன் என்பவர் பதிவு செய்த பெற்ற புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து அதில் முகாந்திரம் இருந்தபடியால் கோட்டப்பட்டி காவல் நிலைய குற்ற எண். 159/2018 சட்ட பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(2) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். பின்பு முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். ( **முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காவல் உதவி ஆய்வாளர் 31.07.2018ம் தேதி மாலை 6 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள்அசோக் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, வாக்குமூலம் பதிவு செய்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார். **(மாதிரிவரைபடம் அசாஆ 4 ஆகவும், பார்வை மகசர் ஏற்கனவே அசாஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது**).

மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் கண்ட எதிரிகளை தேடிச்சென்றபோது 2ம் எதிரி சாந்தி என்பவர் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்ற Crl.M.P. No. 1234/2018 என்ற மனுவில் 14.08.2018ம் தேதி பிறப்பித்த உத்தரவின் பேரில் முன்பிணையில் சென்ற தகவலை பெற்றுள்ளார். இவ்வழக்கின் 1ம் எதிரியான ஏழுமலை என்பவரை பையர்நாயக்கன்பட்டி- கத்திரிப்பட்டி சாலையில் கைது செய்து பின்பு நிலையம் கொண்டுவந்து பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அசா1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அரிகிருஷ்ணராஜ் மற்றும் இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பதிவு செய்த சென்னன்

ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அசா1க்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று வழங்கினார். **அசா1ன் காயச்சான்று அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக 14.09.2018ம் தேதி அன்று சட்ட பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(2) இதசஆகிய பிரிவின் எதிரிகள் ஏழுமலை மற்றும் சாந்தி ஆகியோர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் புலன் விசாரணை செய்யவில்லை. வழக்கின் சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை. நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. அசா1 கொடுத்த புகாரின் மீது வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன்விசாரணை மேற்கொள்ளாமலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்காமலும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்திலே தயார் செய்து எதிரிகள் மீது தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**